Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.308 /2020 Date:18.05.2026
Deposition of witness for prosecution: PW6 ( LW2)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. தர்மர் | Village | திண்டுக்கல் |
| Father/ Husband Name | முத்துக்கண்ணன் | Taluk | திண்டுக்கல் |
| Age | 57/26 | Calling | சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 18.05.2026 TIME AM/ **PM**

2-வது எதிரி ஆஜர். 1-வது எதிரி ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது வேடசந்தூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.03.2019-ம் தேதி காலை 07.00 மணிக்கு உத்தமபாளையம் குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறை அலகில் பொறுப்பில் இருந்த போது, அச்சமயத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்த முனியாண்டி என்பவர் 27.03.2019-ம்தேதி 00.30 மணியளவில் கூடலூர்-குமுளி ரோட்டில் மந்தை வாய்க்கால் அருகே மேற்படி அலகில் பணிபுரிந்த தலைமை காவலர் திரு. பழனிச்சாமி மற்றும் தலைமை காவலர் திரு. நூர்முகமது ஆகியோருடன் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது, ரேசன் அரிசி கடத்தப்பட்ட மாட்டு வண்டிகளையும், எதிரிகளையும் ஆய்வு செய்து பரிமுதல் செய்து தனியறிக்கை தயார் செய்து என்னிடம் சமர்ப்பித்தார். அதன் அடிப்படையில் அலகு குற்ற எண்.45/19 பிரிவு 6(4) TNCSC (RDCS) Order 1982 r/w 7(1)(a)(ii) EC act 1955-ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை, தனியறிக்கை ஆகியவற்றை இந்நீதிமன்றத்திற்கும் மேல் அதிகாரிக்கும் சமர்ப்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தது தான். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.10** ஆகும்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சிறப்பு சார்பு ஆய்வாளர் முனியாண்டி என்பவர் அளித்த தனிப்புகாரானது கைப்பட எழுதியதா என்றால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதாகும். எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. காவல் ஆய்வாளர் 27.03.2019 -ம் தேதி காலை 08.00 மணிக்கு ஆய்வாளர் என்னை அலகில் வைத்து விசாரித்தார். புள்ளி விபர கணக்கிற்காக ஆய்வாளர் தயார் செய்து சிறப்பு சார்பு ஆய்வாளர் முனியாண்டி மூலம் அளித்த பொய் தனிப்புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

என்னிடம் ஒப்படைக்கப்பட்ட அரிசி பைகள் நாங்கள் ஏற்கனவே எங்களது காவல்நிலையத்தில் இருப்பு வைத்திருந்து என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.